தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஓரணியில் தமிழ்நாடு என்கிற உறுப்பினர் சேர்க்கும் பணி 137ஆ வட்டத்தில் சிறப்பாக நடைபெற்று வருகிறது. அந்த வகையில் 500 நபர்களை சேர்க்கும் பாகத்திற்கு ஊக்குவிக்கும் விதமாக ரூபாய் 10 ஆயிரம் தருவதாக 137வது ஆ வட்டக் கழக செயலாளர் அ.கதிரேசன் அறிவித்திருந்தார். அதன் அடிப்படையில் 148 வது பாகத்தைச் சேர்ந்த கே.பி.குமார் BLA 2, BDA D.கோபி ஆகியோர் இரண்டே நாட்களில் 505 நபர்களை உறுப்பினராக சேர்த்தனர். அவர்களுக்கு மாவட்ட கழகச் செயலாளர், அமைச்சர் மா.சுப்பிரமணியன் இருவருக்கும் சால்வை அணிவித்து ரூபாய் பத்தாயிரத்திற்கான காசோலை வழங்கி பாராட்டுகளை தெரிவித்தார். அது போது உடன் ஏ.எம்.வி.பிரபாகரராஜா எம்.எல்.ஏ., பகுதி கழகச் செயலாளர் கே.கண்ணன், என். சக்கரவர்த்தி, எம்.சுந்தர்ராஜன், பகுதி துணை அமைப்பாளர் முத்துக்குமார் , பகுதி அமைப்பாளர் ஏ.சசி ஆகியோர் உடன் இருந்தனர்.





அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு நேற்று (9.7.2025) வடசென்னை வளர்ச்சி திட்டத்தின் கீழ் சிஎம்டிஏ சார்பில் மேம்படுத்தப்பட்டுவரும் கொளத்தூர் ஏரியை நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களை அறிவுறுத்தினார். இந்த ஆய்வின்போது சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர்/முதன்மைச் செயலாளர் திரு.கோ.பிரகாஷ், மண்டலக் குழுத்தலைவர் திருமதி.சரிதா மகேஷ்குமார், மாமன்ற உறுப்பினர் நாகராஜன், தலைமைத் திட்ட அமைப்பாளர் .எஸ்.ருத்ரமூர்த்தி, அரசு அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் உடனிருந்தனர்.

### அரியலூர் வழியாகச் செல்லும் அதிவிரைவு இரயில்களை

# அரியலூர் இரயில் நிலையத்தில் நின்று செல்வதற்கு நடவடிக்கை!

## டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி. இரயில்வே துறை அமைச்சருக்கு கடிதம்!



*சென்னை, ஜூலை 10 -*

"அரியலூர் வழியாகச் செல்லும் அதிவிரைவு இரயில்களை அரியலூர் ரயில் நிலையத்தில் நின்று செல்ல நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி. ஒன்றிய இரயில்வே அமைச்சருக்குக் கடிதம் எழுதியுள்ளார்.

அக் கடிதத்தில் அவர் மேலும் கூறியுள்ளதாவது :

அரியலூர் நகரம், மாவட்டத் தலைநகராகவும், அங்கு அமைக்கப்பட்டுள்ள தொழிற்பேட்டையில் வளர்ந்து வரும் பல தொழிற்சாலைகளைக் கொண்ட நகரமாகவும் விளங்கி வருகிறது. இப்பகுதி சிமெண்ட் மற்றும் சுண்ணாம்பு தொழிற்சாலைகளின் மையமாகவும் உள்ளது. ஆனால் இந்நகரத்தின் இரயில் நிலையத்தின் வழியாகச் செல்லும் எக்ஸ்பிரஸ் இரயில்கள், இந்த இரயில் நிலையத்தில் நின்று செல்வதில்லை. இந்நகரத்தில் வளர்ந்து வரும் தொழில் வளர்ச்சியால், இங்கு வரும் வியாபாரிகள் மற்றும் பொது மக்களின் எண்ணிக்கை வளர்ந்து வருகிறது. எனவே, இந்த இரயில் நிலையத்தின் வழியாக செல்லும் சென்னை எழும்பூர் - மதுரையை தேஜா எக்ஸ்பிரஸ், சென்னைநெல்லையை இணைக்கும் வந்தே பாரத் எக்ஸ்பிரஸ், கன்னியாகுமரி எக்ஸ்பிரஸ், கொயிலான் எக்ஸ்பிரஸ், அனந்தபுரி சூப்பர்பாஸ்ட் எக்ஸ்பிரஸ், சென்னை எழும்பூர் - செங்கோட்டை செல்லும் பொதிகை சூப்பர்பாஸ்ட் எக்ஸ்பிரஸ், நெல்லை எக்ஸ்பிரஸ் மற்றும் பாண்டியன் சூப்பர்பாஸ்ட் எக்ஸ்பிரஸ் முதலான விரைவு இரயில்களை அரியலூர் இரயில் நிலையத்தில் நின்று செல்வதற்குச் சம்பந்தப்பட்ட இரயில்வே அதிகாரிகளுக்குத் தக்க ஆணைகளை இடுமாறு தங்களை அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

இப்பகுதியில் வாழும் பொது மக்கள் வியாபாரிகள், தொழிற்சாலைகளில் பணியாற்றும் தொழிலாளிகள் மற்றும் மாணவர்கள் என அனைத்துப் பிரிவினருக்கும் உதவியாக இருக்கும். மேலும், பின் தங்கியுள்ள கிராமப் பகுதிகளும் வளர்ச்சி பெறும். எனவே, இக்கோரிக்கையின் நியாயத்தை ஆராய்ந்து, தக்க நடவடிக்கைகளை உடனே எடுக்கும்படி தங்களைக் கேட்டுக் கொள்கின்றேன்.

இவ்வாறு அக்கடிதத்தில் டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி. கூறியுள்ளார்

### திருப்போரூரில் இன்று மாலை நடைபெறுகிறது

# அ.தி.மு.க.வினர் பொய்ப் பிரச்சார ஆர்ப்பாட்டத்தைக் கண்டித்து பதில் விளக்க மாபெரும் பொதுக்கூட்டம்!

## அமைச்சர் தா.மோ. அன்பரசன் - தமிழன் பிரசன்னா சிறப்புரை

*செங்கல்பட்டு, ஜூலை 10 -*

திருப்போரூரில் நேற்று அ.தி.மு.க.வினர் நடத்திய பொய் பிரச்சார ஆர்ப்பாட்டத்தை கண்டித்து பதில் விளக்க மாபெரும் பொதுக் கூட்டம் இன்று மாலை திருப்போரூர் வடக்கு ஒன்றிய செயலாளர் - ஒன்றிய குழுத்தலைவர் எஸ்.ஆர்.எல். இதயவர்மன் தலைமையில் இன்று மாலை நடைபெறுகிறது. அமைச்சர் தா,மோ,அன்பரசன், தமிழன் பிரசன்னா ஆகியோர் சிறப்புரை ஆற்றுகின்றனர்.

திருப்போரூரில் நேற்று அ.தி.மு.க.வினர் நடத்திய பொய் பிரச்சார ஆர்ப்பாட்டத்தை கண்டித்து பதில் விளக்க மாபெரும் பொதுக் கூட்டம் இன்று மாலை 4.00 மணியளவில் திருப்போரூர் அம்பேத்கர் சிலை ரவுண்டானா அருகில் திருப்போரூர் வடக்கு ஒன்றிய செயலாளர் - ஒன்றிய குழுத்தலைவர் எஸ். ஆர்.எல்.இதயவர்மன் தலைமையில் நடைபெறுகிறது.

திருப்போரூர் தெற்கு ஒன்றிய செயலாளர் பையனூர் மு.சேகர், திருப்போரூர் செயலாளர் - போரூராட்சி மன்றத் தலைவர் மு.தேவராஜ் ஆகியோர் அனைவரையும் வரவேற்று பேசுகிறார்.

திருக்கழுக்குன்றம் வடக்கு ஒன்றிய செயலாளர் வி.தமிழ்மணி, மாவட்ட பொ ருளாளர் வெ.விசுவநாதன், திருக்கழுக்குன்றம் பேரூர் செயலாளர் டி.யுவராஜ், திருக்கழுக்குன்றம் ஒன்றிய குழுத்தலைவர் ஆர்.டி.அரசு, தலைமை செயற்குழு உறுப்பினர் ஜி.சி. அன்புசெழியன், மாவட்ட ஊராட்சிக்குழு துணைத்த லைவர் காயத்திரி அன்புச்செழியன், சத்திய சேகர், எஸ்.ஏ.பச்சையப்பன், மாவட்ட பிரதிநிதிகள் எஸ். அஸ்கர்அலி, வி.சந்திரன். பேரூராட்சி துணைத்தலைவர்கள் ஆர்.பரசுராமன். வீ.அருள்மணி,

திருப்போரூர் பேரூர் நிர்வாகிகள் ஜி.பலராமன், எஸ். ஏழுமலை, ஜி.வாணி, டி. கே.பாலசுப்பிரமணியன், டி.மோகன், டி.டி.சேகர், ஏ.கமலகண்ணன், வி.வீரபத்திரன், ஏ.குமரன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக்கூட்டத்தில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் செயலாளர் அமைச்சர் தா.மோ. அன்பரசன் மற்றும் மாநில செய்தி தொடர்பு இணை செயலாளர் சிறப்பு பேச்சாளர் தமிழன் பிரசன்னா ஆகியோர் கலந்து கொண்டு அ.தி. மு.க.வினர் நடத்திய பொய் பிரச்சார ஆர்ப்பாட்டத்தை கண்டித்து பதில் விளக்க உரை ஆற்ற உள்ளனர்.

காஞ்சிபுரம் நடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், திருப்போரூர் சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் எஸ். எம்.கே.அண்ணாதுரை, மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பார் வீ.விஜயகுமார், மாவட்ட மகளிர் தொண்டர் அணி அமைப்பார் ச.சசிகலா, மாவட்ட மீனவர் அணி துணை அமைப்பார் ஆர்.கோவிந்தன், கழக அணிகளின் மாவட்ட துணை அமைப்பாளர்கள் எஸ்.ஜெகதீப், எம்.சி.ராகவன், க.ரவிக்குமார், தே,செங்குட்டுவன், ஆர்.யாதவன், ஏ.முனுசாமி, சி, பஞ்சாமிர்தம், டி.வெங்கடேசன், பி.சிவமணி, சி.கோபிநாத், பர்வின் நிஷா, ஆர்.பவித்ரா, செ,எல்லப்பன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் இக்கூட்டத்தில் பங்கேற்று சிறப்பிக்க உள்ளனர்.

முடிவில் திருப்போரூர் வடக்கு ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் க.கவுரி சங்கர் நன்றி உரை ஆற்றுகிறார்.



திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஆவடியில் சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமம் சார்பில் ரூ36.06 கோடி மதிப்பீட்டில் மூன்று தளம் கொண்ட அதிநவீன பேருந்து நிலையத்தை மேம்படுத்தும் பணிகளை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ்தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் ஆகியோர் தொடங்கி வைத்தார்கள். இந்நிகழ்ச்சியில் மாநகர மேயர் உதயகுமார் , துறை சார்ந்த அதிகாரிகள் பிரகாஷ், பிரபு சங்கர், மாநகர கழக பொறுப்பாளர் சன்பிரகாஷ் மாநகர துணை மேயர் சூரியகுமார் பகுதி கழக செயலார்கள் ஜி.நாராயண பிரசாத், ஜி.ராஜேந்திரன் , பொன் விஜயன் , பேபி சேகர், மண்டல குழு தலைவர்கள் ஜோதிலட்சுமி, அமுதா பேபி சேகர், வி அம்மு, மற்றும் அரசு அலுவலர்கள் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்

# ரூ.36 கோடியில் ஆவடியில் 3 தளங்களுடன் கூடிய பேருந்து நிலையம்!

## அமைச்சர்கள் பி.கே.சேகர்பாபு – சா.மு.நாசர் பணிகளை தொடங்கி வைத்தனர்!

*திருவள்ளூர், ஜூலை 10*

திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஆவடி போக்குவரத்து பணிமனையில் இருந்து தினமும் 55 வழித்தடங்களில் 200க்கும் மேற்பட்ட பேருந்துகள் 1,200க்கும் மேற்பட்ட நடை இயக்கப்பட்டு வருகின்றன.

இது தவிர இங்கிருந்து செங்கோட்டை,தூத்துக்குடி, திருநெல்வேலி, ராஜபாளையம் உள்ளிட்ட வெளிமாவட்டங்களுக்கு பேருந்துகள் இயக்கப்படுகின்றன. சுமார் 2 ஏக்கர் பரப்பளவில் உள்ள ஆவடி பேருந்து நிலையம் உருவாக்கப்பட்டு பல ஆண்டுகளுக்கு மேலாகிறது.

இங்கு கழிப்பறை, குடிநீர், இருக்கைகள், மின் விளக்குகள் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் சரிவர இல்லை. மேலும் சிறு மழை பெய்தால் கூட பேருந்து நிலையத்தில் குளம் போல் தண்ணீர் தேங்கி நிற்கும். இதனால் பயணிகள் சிரமப்பட்டு வந்து செல்கின்றனர்.

இந்த பேருந்து நிலையத்தை தரம் உயர்த்த வேண்டுமென சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் சா.மு.நாசர், முதல்வர் மு.க.ஸ்டாலின் கவனத்திற்கு கொண்டு சென்றார்.

இதையடுத்து அவர் உத்தரவின் பேரில், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் சார்பில் ரூ.36 கோடி மதிப்பீட்டில் நிதி ஒதுக்கீடு செய்து, ஆவடி பேருந்து நிலையத்தை நவீன வசதிகளுடன் அமைத்திட உத்தரவிட்டார்.

இந்த பேருந்து நிலையம் தரைத்தளம் உள்ளிட்ட 3 தளத்திலும் கூடிய வடிவத்தில் வணிக வளாகம், பயணிகள் தங்கும் அறை, நடத்துனர் ஓட்டுனர் ஓய்வறைகள், பயணச்சீட்டு பரிசோதகர் அறை, வாகனங்கள் நிறுத்தும் வசதி உள்ளிட்ட பல்வேறு வசதிகளுடன் அமைய உள்ளது.

இதற்கான தொடக்க விழா ஆவடி பேருந்து நிலைய வளாகத்தில் நடைபெற்ற நிலையில் அமைச்சர்கள் பி.கே.சேகர்பாபு, ஆவடி சா.மு.நாசர் போக்குவரத்து கழக அதிகாரிகள் பணிகளை துவக்கி வைத்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் மாநகர மேயர் உதயகுமார் , மாநகர அரசுத்துறை அதிகாரிகள் பிரகாஷ் ,பிரபுசங்கர், மாநகர பொறுப்பாளர் சன். பிரகாஷ் , மாநகர துணை மேயர் சூரியகுமார், பகுதி கழகச் செயலாளர்கள் ஜி. நாராயண பிரசாந்த், ஜி.ராஜேந்திரன் , பொன் விஜயன், பேபி சேகர் , மண்டல குழு தலைவர்கள் ஜோதிலட்சுமி, அமுதா பேபி சேகர், வி.அம்மு மற்றும் அரசு அதிகாரிகள் மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்கள் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்

### இராயபுரம் தொகுதியில் – இன்று

# ரூ.4.26 கோடியில் பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்குக் கட்டிடம்!

## டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி. அடிக்கல் நாட்டுகிறார்!

*சென்னை, ஜூலை 10*

இராயபுரம் சட்டமன்றத் தொகுதியில் ரூபாய் 4 கோடியே 26 லட்சங்கள் செலவில் புதிதாக கட்டப்படவுள்ள சென்னை பெண்கள் மேல்நிலைப்பள்ளி கட்டிடத்திற்கு இன்று (10. 07.2025 வியாழக்கிழமை) காலை 10.30 மணிக்கு வட சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி. அடிக்கல் நாட்டுகிறார்

வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி மற்றும் சென்னை துறைமுகத்தின் சமூக பொறுப்பு நிதி மூலம் இராயபுரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வார்டு 48, புத்தா தெருவில் ரூபாய் 4 கோடியே 26 லட்சங்கள் மதிப்பீட்டில் புதிதாக அமையவுள்ள சென்னை பெண்கள் மேல்நிலைப்பள்ளி கட்டும் பணிக்கு டாக்டர். கலாநிதி வீராசாமி எம்.பி., அடிக்கல் நாட்டுகிறார்

இந்நிகழ்வில் மாவட்டப் பொறுப்பாளர் ஆர். டி.சேகர் எம்.எல்.ஏ., சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் இரா. மூர்த்தி, பகுதி கழகச் செயலாளர்கள் வ.பெ. சுரேஷ், இரா.செந்தில் குமார், வடக்கு வட்டார துணை ஆணையர் கட்டா ரவி தேஜா, மாமன்ற உறுப்பினர் திருமதி. விஜயலட்சுமி விஜயகுமார், வட்டக் கழகச் செயலாளர்கள் விஜயகுமார், பாலன், மற்றும் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட மாநில மாவட்ட பகுதி கழக நிர்வாகிகள், மண்டல அலுவலர்கள் பங்கேற்கின்றனர்.



கழகத் தலைவர், தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் முன்னெடுப்பில் 'ஓரணியில் தமிழ்நாடு' புதிய உறுப்பினர்கள் சேர்க்கை முகாம் கழகத்தலைவர் முன்னெடுப்பை தொடர்ந்து திருவள்ளூர் மத்திய மாவட்டம் திருவள்ளூர் வடக்கு ஒன்றியம் சார்பாக ஒதிக்காடு ஊராட்சியில் திருவள்ளூர் வடக்கு ஒன்றிய செயலாளர் டி.முரளிகிருஷ்ணன் தலைமையில் உறுப்பினர் சேர்க்கை முகாம் நடைபெற்றது . இதில் மாநில ஆதிதிராவிட நலக்குழு செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ வீடு வீடாகச் சென்று கழக ஆட்சியின் சாதனைகளை எடுத்துக் கூறி உறுப்பினர் சேர்க்க பணியில் ஈடுபட்டார் அருகில் டி. தென்னவன், எஸ்.மனோகரன், பிமதுரை வீரன், பிராங்கிளின் அரிகிருஷ்ணன் பாலாஜி, சஞ்சய் திருமலை, மோசஸ், ஆமோஸ் சத்யராஜ் ஜஸ்டின் பால், பிரபுராஜ், ராஜி, சாம்ராஜ் கன்னியப்பன், இயேசு, சுலோச்சனா, உட்பட்ட பாகமுவர்கள் கழக நிர்வாகிகள் உள்ளனர்

### சிவகங்கை தனசேகரன் ஏற்பாட்டில்

# 'ஓரணியில் தமிழ்நாடு' பரப்புரை உறுப்பினர் சேர்த்தல் நிகழ்ச்சி!

*சிவகங்கை, ஜூலை 10 -*

சிவகங்கை மாவட்ட வர்த்தக அணி சார்பில் சிவகங்கை நகர் 15வது வட்டத்தில் மாவட்ட வர்த்தக அணி துணை தலைவர் தனசேகரன் ஏற்பாட்டின் பேரில் கழக தலைவர் முதல்வர் தளபதி அவர்கள் ஆணையின்படி மாவட்ட கழகச் செயலாளர் அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் வழிகாட்டுதலின்படி 'ஓரணியில் தமிழ் நாடு' பரப்புரை கழக உறுப்பினர் சேர்த்தல் நிகழ்ச்சி முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள் விழா நகர்ர்மன்ற தலைவர், நகர் கழக செயலாளர் சி.எம்.துரை.ஆனந்த் தலைமையில் நடைபெற்றது.

மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர் தனசேகரன் வரவேற்றுப் பேசினார்.

இந்த நிகழ்ச்சியில் ஓரணியில்தமிழ்நாடு பரப்புரை , கழக அரசின் நான்காண்டு சாதனைகள் குறித்தும், கழக உறுப்பினர் சேர்க்கை குறித்து நகர் மன்ற தலைவரும், நகர்கழக செயலாளர் சி.எம். துரை ஆனந்த் சிறப்புரை ஆற்றி . மரக்கன்றுகளை வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட கழக செய்தி தொடர்பாளர் அ.அயூப்கான், நகர்மன்ற உறுப்பினர்கள் ஜெயகாந்தன், ராமதாஸ், பிரேம், கார்த்தி ,தகவல் தொழில்நுட்ப அணிசதீஷ், ஓய்வு பெற்ற டி. எஸ். பி. கண்காணிப்பாளர் ஞானசேகரன் , முன்னாள் நகர் மன்ற உறுப்பினர் ஜெயக்குமார் மற்றும் வார்டு பொதுமக்கள் கலந்து கொண்டார்கள்.



தமிழ்நாடு சிறுபான்மை ஆணைய துணை தலைவர் இறையன்பன் குத்தூஸ் ஆலோசனைப்படி சென்னை மேற்கு மாவட்டம், திருவல்லிக்கேணி பகுதி, 120 வது வார்டு, 195 வது வாக்குச்சாவடிக்கு உட்பட்ட இலாயிட்ஸ் காலனியில் "ஓரணியில் தமிழ்நாடு கழக உறுப்பினர் சேர்ப்பு பணியில் வட்ட கழக செயலாளர் ICF சங்கர் மற்றும் ஐடி விங் கழக நிர்வாகிகளுடன் ஈடுபட்டார்.







கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களால் ஆணையிடப்பட்ட, ஓரணியில் தமிழ்நாடு தமிழ்நாட்டின் மண், மொழி, மானம் காப்போம். அனைவரும் கழக உறுப்பினராவோம் என்கின்ற கழக உறுப்பினர் சேர்க்கும் நிகழ்ச்சி, சென்னை வடக்கு மாவட்டம், பெரம்பூர் தெற்கு பகுதி, 44வது வட்டக் கழக செயலாளர் பெரம்பூர் த. ஆறுமுகம் தலைமையில் பாகம் 178 மேல்பட்டி பொன்னப்பன் தெருவில் வீடு வீடாக சென்று கழக உறுப்பினர் சேர்க்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் பகுதி கழக செயலாளர் க ஜெயராமன், பெரம்பூர் தொகுதி பார்வையாளர் கன்னிகை ஜி. ஸ்டாலின், மாநகர மன்ற உறுப்பினர் சர்வ ஜெயதாஸ் நரேந்திரன், நா. சேகர், மு. சாகுல் ஹமீது, ஜோதிமணி ராதாகிருஷ்ணன்,பி. சண்முகம்,வி. மணி, கோ. பொன்னிவளவன், புல்லட் பி. கிருஷ்ணன், ஜே. கோமதி, கோ. சதீஷ்,ஆ ராதாகிருஷ்ணன், ஹேமா ஹரிணி, ராஜேந்திரன், கே ஸ்ரீதர், வே, தீனதயாளன், பி. சசிகுமார், குணசேகரன், கே மோகன்ராஜ், ஆர் கோவிந்த ராஜுலு,ஆ. பொன்னுசாமி, பிரசாந்த், என் ஹரிகரன், ஜி.தேவேந்திர ராஜ்குமார், மற்றும் பலர் கலந்து கொண்டனர்



தியாகராயர் நகர் மேற்கு பகுதி 133 (அ) வட்டத்தில் பகுதி செயலாளர் கே. ஏழுமலை எம். சி பிரச்சாரத்தை தொடங்கி வைத்தார் . வட்ட செயலாளர் பி.மாரி தலைமையில்ஓ ரணியில் தமிழ்நாடுதிராவிட மாடல் அரசின் சிங்கார சென்னை 2.0 விளக்க பிரச்சார வேன் ரங்கநாதன் தெரு ,தியாகராய நகர் பஸ் நிலையம் அருகில் ஆகிய இடங்களில் நடைபெற்றது இவ் விளக்கவுரையில் தலைமை கழக பேச்சாளர் ச.சண்முகநாதன், என்.எஸ்.பாலசுப்ரமணியம் விளக்க உரை நிகழ்த்தினார் . இந்நிகழ்ச்சிக்கு வட்ட நிர்வாகிகள் பகுதி பிரதிநிதிகள் அனைத்து அணிகளின் நிர்வாகிகள் செயல்வீரர்கள் கலந்து கொண்டனர்.